நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், ஆத்தூர்
முன்னிலை திரு. பூ.ஜீவன் குமார், பி.காம்., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண் 2, ஆத்தூர்.

2021 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 28 நாள் செவ்வாய்க்கிழமை
திருவள்ளுவராண்டு 2062 சார்வரி வருடம் மார்கழி திங்கள் 13 ம் நாள்

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 59/2017

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
FRO Attur காவல் நிலையம்.
WLOR .No. 01/2017

...குற்றமுறையிடுபவர்.

/எதிராக/

1 கிருஷ்ணன் ,
த/பெ. சின்னசாமி.

2 கண்ணையன்,
த/பெ.சின்னசாமி.

...எதிரிகள்

எதிரிகளின் மீதான இந்த வழக்கானது இந்நீதிமன்ற கோப்பிற்கு கடந்த 17.07.2017 ம் தேதி எடுத்துக் கொள்ளப்பட்டது. அரசுத்தரப்பில் அறிவார்ந்த அரசு குற்றத்துறை வழக்குரைஞர் நிலை- 2 அவர்களும், எதிரிகள் தரப்பில் அறிவார்ந்த வழக்குரைஞர்கள் திருவாளர்கள் திரு. R.S காளிமுத்து, T. வேல்முருகன் அவர்கள் ஆஜராகி எடுத்துரைக்க இவ்வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இருதரப்பு எடுத்துரைத்ததைக் கேட்டும் இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

1) கடந்த 15.01.2017 ஆம் தேதி சேலம் வனப்பாதுகாப்பு படையினர் மூலம் கிடைத்த தகவலின் படி ஆத்தூர் வனச்சரக அலுவலர் திரு. த. சிரஜீதீன், ஆத்தூர் பிரிவு வனவர், திரு.பி. பொன்னுசாமி, மற்றும் நாகலூார் கிழக்கு பீட் வனக்காப்பாளர், திரு. அ. முருகன், ஆகியோர்கள் மாலை சுமார் 5 மணியளவில் ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன்பாளையம் , காரமணித்திட்டு என்ற இடத்திற்கு சென்று சின்னுசாமி என்பவரது மகன்கள் கிருஷ்ணன் மற்றும் கண்ணையனை இராமநாயக்கன் பாளையம், ஆகியோரை கிராம நிர்வாக அலுவலர் முன்னைிலையில் விசாரித்தபொழுது அவர்கள் தங்களது நிலத்தில் பயிரிட்டிருந்த குச்சி கிழங்கு சேத்செய்யும் பெருச்சாளிகளை அழிக்க

தங்களது நிலத்தில் 01.01.2017 ம் தேதி இரவு திருட்டுத்தனமாக மின்வேலி போட்டதாகவும், அதில் 02.01.2017 ஆம் தேதி காலை ஆண் காட்டெருமை ஒன்றும் பெண் காட்டெருமை ஒன்றும் மின்வேலியில் மாட்டி இறந்துவிட்டது என்றும், தானும் எனது அண்ணனும் சேர்ந்து ராமநாயக்கன்பாளையம் 02.01.2017 ம் தேதி குழித்தோண்டி புதைக்கப்பட்டதாக தன்னிச்சையாக தெரிவித்துள்ளார்கள் என்றும், பின்னர் எதிரிகளான கிருஷ்ணன் மற்றும் கண்ணையன் ஆகியோரிகளிடம் காட்டெருமை தோண்டி புதைக்கப்பட்ட இடத்தை காண்பிக்கும் படி சொன்னதின் பேரில் அவர்கள் புதைக்கப்பட்ட இடத்தை காண்பிக்கும்படி சொன்னதின் பேரில் அவர்கள் புதைக்கப்பட்ட இடத்தை காண்பித்த பின்னர் எதிரியின் அனுபவ நிலத்தில் வன அதிகாரிகள் இராமநாயக்கன்பாளையம், கிராம நிர்வாக அலுவலர் மற்றம் எதிரிகளின் முன்னிலையில் தோண்டிப் பார்த்தபொழுது குழியில் ஆண் காட்டெருமை ஒன்றும் பெண் காட்டெருமை ஒன்றும் இறந்து அழுகிய நிலையில் காணப்பட்டது என்றும், பின்னர் கல்பகனூர் கால்நடை உதவி மருத்துவரை அழைத்து வந்து அவைகள் காட்டெருமைகள் தான் என உறுதி செய்யப்பட்டு அங்கேயே கால்நடை மருத்துரால் பிரேத பரிசோதனை செய்து மருத்துவரின் அறிவுரைப்படி குழிதோண்டி இறந்து கிடந்த நிலத்திலேயே புதைக்கப்பட்டது என்றும், பின்பு அழுகாத நிலையிலிருந்த காட்டெருமை கொம்புகள் இரண்டு மற்றம் மின்வேலி அமைக்க பயன்படுத்தப்பட்ட கம்பியினை அ.முருகன், நாகலூர் கிழக்கு பீட் வனக்காப்பாளரின், H நமூனா எண் 37 நாள் 15.01.2017 முதல் சாட்சியான திரு. த. சிராஜீதீன், வனச்சரக அலுவலர், மற்றும் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் மகஜர் ஸ்டேட்மென்ட், மற்றும் H நமூனா சம்பவ இடத்திலேயே தயார் செய்யப்பட்டு காட்டெருமைகளின் கொம்புகளை கைப்பற்றப்பட்டது. எதிரிகள் தாங்கள் செய்த குற்றத்தினை ஒப்புக்கொண்டு வனச்சரக அலுவலர் மற்றும் அரசு தரப்பு சாட்சிகள் முன்னிலையில் கொடுத்த வாக்குமூலத்தினை திரு. பொன்னுசாமி, ஆத்தூார் பிரிவு வனவரால் பதிவு செய்யப்பட்டது என்றும், பின்னர் 1 ம் எதிரி கிருஷ்ணன் மற்றும் 2 ம் எதிரி கண்ணையன் மீது 1972 ம் ஆண்டு வன உயிரின பாதுகாப்பு சட்டம் பிரிவு 9-ன் படி( இணைத்து பார்க்க வேண்டிய பிரிவுகள் 2(16), 2(36) அட்டவணை-1 பிரிவு 1 Section 39(b) அரசு சொத்து, section 50 அதிகாரம், மேலும் பிரிவு 51 தண்டணை) -ன் கீழ் குற்றம் சாட்டி வனச்சரக அலுவலர் புலன் விசாரணை முடித்து குற்ற அறிக்கை எண். 1/2017, அ-படிவம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

2) இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கின் குற்றம் புலன் கொண்டு வழக்கை சிசி. 59/2017 ஆக கோப்பில் எடுத்துக் கொண்டு எதிரிகளுக்கு அழைப்பாணை கொடுக்கப்பட்டது.

3) குற்ற இறுதி அறிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் சார்ந்திருக்கும் வழக்காவணங்கள் மற்றும் வாக்குமூலங்களின் நகல்கள் கட்டணமின்றியும் காலதாமதமின்றியும் குவிமுச பிரிவு 207-ன்படி எதிரிகளுக்கு வழங்கப்பட்டது.

4). குற்ற முறையிடுபவர் தரப்பு முதல் நிலையில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் இருந்து தெரிய வரும் குற்றம் முறையிடுபவர் தரப்பு வழக்கு சுருக்கம் பின்வருமாறு:

கடந்த 15.01.2017 ஆம் தேதி சேலம் வனப்பாதுகாப்பு படையினர் மூலம் கிடைத்த தகவலின் படி ஆத்தூர் வனச்சரக அலுவலர் திரு. த. சிரஜீதீன், ஆத்தூர் பிரிவு வனவர், திரு.பி. பொன்னுசாமி, மற்றும் நாகலூர் கிழக்கு பீட் வனக்காப்பாளர், திரு. அ. முருகன், ஆகியோர்கள் மாலை சுமார் 5 மணியளவில் ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன்பாளையம் , காரமணித்திட்டு என்ற இடத்திற்கு சென்று சின்னுசாமி என்பவரது மகன்கள் கிருஷ்ணன் மற்றும் கண்ணையனை இராமநாயக்கன் பாளையம், ஆகியோரை கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் விசாரித்தபொழுது அவர்கள் தங்களது நிலத்தில் பயிரிட்டிருந்த குச்சி கிழங்கு சேத்செய்யும் பெருச்சாளிகளை அழிக்க தங்களது நிலத்தில் 01.01.2017 ம் தேதி இரவு திருட்டுத்தனமாக மின்வேலி போட்டதாகவும், அதில் 02.01.2017 ஆம் தேதி காலை ஆண் காட்டெருமை ஒன்றும் பெண் காட்டெருமை ஒன்றும் மின்வேலியில் மாட்டி இறந்துவிட்டது என்றும், தானும் எனது அண்ணனும் சேர்ந்து ராமநாயக்கன்பாளையம் 02.01.2017 ம் தேதிகுழித்தோண்டி புதைக்கப்பட்டதாக தன்னிச்சையாக தெரிவித்துள்ளார்கள் என்றும், பின்னர் எதிரிகளான கிருஷ்ணன் மற்றும் கண்ணையன் ஆகியோரிகளிடம் காட்டெருமை தோண்டி புதைக்கப்பட்ட இடத்தை காண்பிக்கும் படி சொன்னதின் பேரில் அவர்கள் புதைக்கப்பட்ட இடத்தை காண்பிக்கும்படி சொன்னதின் பேரில் அவர்கள் புதைக்கப்பட்ட இடத்தை காண்பித்த பின்னர் எதிரிகளின் அனுபவ நிலத்தில் வன அதிகாரிகள் இராமநாயக்கன்பாளையம், கிராம நிர்வாக அலுவலர் மற்றம் எதிரிகளின் முன்னிலையில் தோண்டிப் பார்த்தபொழுது குழியில் ஆண் காட்டெருமை ஒன்றும் பெண் காட்டெருமை ஒன்றும் இறந்து அழுகிய நிலையில் காணப்பட்டது என்றும்இ பின்னர் கல்பகனூர் கால்நடை உதவி மருத்துவரை அழைத்து வந்து அவைகள் காட்டெருமைகள் தான் என உறுதி செய்யப்பட்டு அங்கேயே கால்நடை மருத்துரால் பிரேத பரிசோதனை செய்து மருத்துவரின் அறிவுரைப்படி குழிதோண்டி இறந்து கிடந்த நிலத்திலேயே புதைக்கப்பட்டது என்றும், பின்பு அழுகாத நிலையிலிருந்த காட்டெருமை கொம்புகள் இரண்டு மற்றம் மின்வேலி அமைக்க பயன்படுத்தப்பட்ட கம்பியினை அ.முருகன், நாகலூர் கிழக்கு பீட்

வனக்காப்பாளரின், H நமூனா எண் 37 நாள் 15.01.2017 முதல் சாட்சியான திரு. த. சிராஜீதீன், வனச்சரக அலுவலர், மற்றும் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் மகஜர் ஸ்டேட்மென்ட், மற்றும் H நமூனா சம்பவ இடத்திலேயே தயார் செய்யப்பட்டு காட்டெருமைகளின் கொம்புகளை கைப்பற்றப்பட்டது என்றும், எதிரிகள் தாங்கள் செய்த குற்றத்தினை ஒப்புக்கொண்டு வனச்சரக அலுவலர் மற்றும் அரசு தரப்பு சாட்சிகள் முன்னிலையில் கொடுத்த வாக்குமூலத்தினை திரு. பொன்னுசாமி, ஆத்தூர் பிரிவு வனவரால் பதிவு செய்யப்பட்டது என்றும், பின்னர் 1ம் எதிரி கிருஷ்ணன் மற்றும் 2ம் எதிரி கண்ணையன் மீது 1972ம் ஆண்டு வன உயிரின பாதுகாப்பு சட்டம் பிரிவு 9-ன் படி( இணைத்து பார்க்க வேண்டிய பிரிவுகள் 2(16), 2(36) அட்டவணை-1 பிரிவு 1 Section 39(b) அரசு சொத்து, section 50 அதிகாரம், மேலும் பிரிவு 51 தண்டணை) -ன் கீழ் குற்றம் சாட்டி வனச்சரக அலுவலர் புலன் விசாரணை முடித்து குற்ற அறிக்கை எண். 1/2017, அ-படிவம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது தொடர்பாக சாட்சியம் அளித்துள்ளார்.

5) மேற்கூறிய அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள சாட்சியப் பகுதிகளை குவிமுச 313 (1) (ஆ) -ன் கீழ் விளக்கிக் கூறி கேள்வி கேட்க எதிரிகள் தங்கள் மீதான சாட்சியத்தை மறுத்தார்கள். இது தங்கள் மீது போடப்பட்ட பொய் வழக்கு என்றும், தங்கள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்றார்கள். இத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6) அரசுத்தரப்பு வாதம் பின்வருமாறு.**

கடந்த 15.01.2017 ஆம் தேதி சேலம் வனப்பாதுகாப்பு படையினர் மூலம் கிடைத்த தகவலின் படி ஆத்தூர் வனச்சரக அலுவலர் திரு. த. சிரஜீதீன், ஆத்தூர் பிரிவு வனவர், திரு.பி. பொன்னுசாமி, மற்றும் நாகலூர் கிழக்கு பீட் வனக்காப்பாளர், திரு. அ. முருகன், ஆகியோர்கள் மாலை சுமார் 5 மணியளவில் ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன்பாளையம் , காரமணித்திட்டு என்ற இடத்திற்கு சென்று சின்னுசாமி என்பவரது மகன்கள் கிருஷ்ணன் மற்றும் கண்ணையனை இராமநாயக்கன் பாளையம், ஆகியோரை கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் விசாரித்தபொழுது அவர்கள் தங்களது நிலத்தில் பயிரிட்டிருந்த குச்சி கிழங்கு சேத்செய்யும் பெருச்சாளிகளை அழிக்க தங்களது நிலத்தில் 01.01.2017ம் தேதி இரவு திருட்டுத்தனமாக மின்வேலி போட்டதாகவும், அதில் 02.01.2017 ஆம் தேதி காலை ஆண் காட்டெருமை ஒன்றும் பெண் காட்டெருமை ஒன்றும் மின்வேலியில் மாட்டி இறந்துவிட்டது என்றும், தானும்

எனது அண்ணனும் சேர்ந்து ராமநாயக்கன்பாளையம் 02.01.2017 ம் தேதிகுழித்தோண்டி புதைக்கப்பட்டதாக தன்னிச்சையாக தெரிவித்துள்ளார்கள் என்றும், பின்னர் எதிரிகளான கிருஷ்ணன் மற்றும் கண்ணையன் ஆகியோரிடம் காட்டெருமை தோண்டி புதைக்கப்பட்ட இடத்தை காண்பிக்கும் படி சொன்னதின் பேரில் அவர்கள் புதைக்கப்பட்ட இடத்தை காண்பிக்கும்படி சொன்னதின் பேரில் அவர்கள் புதைக்கப்பட்ட இடத்தை காண்பித்த பின்னர் எதிரியின் அனுபவ நிலத்தில் வன அதிகாரிகள் இராமநாயக்கன்பாளையம், கிராம நிர்வாக அலுவலர் மற்றம் எதிரிகளின் முன்னிலையில் தோண்டிப் பார்த்தபொழுது குழியில் ஆண் காட்டெருமை ஒன்றும் பெண் காட்டெருமை ஒன்றும் இறந்து அழுகிய நிலையில் காணப்பட்டது என்றும், பின்னர் கல்பகனூர் கால்நடை உதவி மருத்துவரை அழைத்து வந்து அவைகள் காட்டெருமைகள் தான் என உறுதி செய்யப்பட்டு அங்கேயே கால்நடை மருத்துரால் பிரேத பரிசோதனை செய்து மருத்துவரின் அறிவுரைப்படி குழிதோண்டி இறந்து கிடந்த நிலத்திலேயே புதைக்கப்பட்டது என்றும், பின்பு அழுகாத நிலையிலிருந்த காட்டெருமை கொம்புகள் இரண்டு மற்றம் மின்வேலி அமைக்க பயன்படுத்தப்பட்ட கம்பியினை அ.முருகன், நாகலுார் கிழக்கு பீட் வனக்காப்பாளரின், H நமூனா எண் 37 நாள் 15.01.2017 முதல் சாட்சியான திரு. த. சிராஜீதீன், வனச்சரக அலுவலர், மற்றும் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் மகஜர் ஸ்டேட்மென்ட், மற்றும் H நமூனா சம்பவ இடத்திலேயே தயார் செய்யப்பட்டுட காட்டெருமைகளின் கொம்புகளை கைப்பற்றப்பட்டது என்றும், எதிரிகள் தாங்கள் செய்த குற்றத்தினை ஒப்புக்கொண்டு வனச்சரக அலுவலர் மற்றும் அரசு தரப்பு சாட்சிகள் முன்னிலையில் கொடுத்த வாக்குமூலத்தினை திரு. பொன்னுசாமி, ஆத்துார் பிரிவு வனவரால் பதிவு செய்யப்பட்டது. பின்னர் 1 ம் எதிரி கிருஷ்ணன் மற்றும் 2 ம் எதிரி கண்ணையன் மீது 1972 ம் ஆண்டு வன உயிரின பாதுகாப்பு சட்டம் பிரிவு 9-ன் படி( இணைத்து பார்க்க வேண்டிய பிரிவுகள் 2(16), 2(36) அட்டவணை-1 பிரிவு 1 **Section** 39(**b**) அரசு சொத்து, **section** 50 அதிகாரம், மேலும் பிரிவு 51 தண்டனை) -ன் படி குற்றம் புரிந்துள்ளதால் எதிரிகளை சட்டப்படி தண்டிக்க வேண்டும் அரச தரப்பில் வாதிடப்பட்டது.

7) ஆனால், எதிரிகள் தரப்பில் எதிரிகள் குற்றவாளி இல்லை என்றும், மேற்படி வழக்கின் சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அரசுத்தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எனவே எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

8) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் 1 ம் எதிரி கிருஷ்ணன் மற்றும் 2 ம் எதிரி கண்ணையன் மீது சட்ட பிரிவுகள் 1972 ம் ஆண்டு வன உயிரின பாதுகாப்பு

சட்டம் பிரிவு 9-ன் படி( இணைத்து பார்க்க வேண்டிய பிரிவுகள் 2(16), 2(36) அட்டவணை-1 பிரிவு 1 **Section** 39(**b**) அரசு சொத்து, **section** 50 அதிகாரம், மேலும் பிரிவு 51 தண்டணை) -ன் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்மாணிக்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

இந்த வழக்கில் அ.சா.1 பொன்னுசாமி தனது சாட்சியத்தில் கடந்த 15.01.2017 அன்று தனது அலுவலகத்தில் இருந்தபோது சேலம் வன அதிரடிப்படை குழுவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படைணியல் எங்கள் அலுவலகத்திற்கு தகவல் சொல்லி அந்த குழுவினருடன் ஆத்துார் வனச்சரக அலுவலர், மற்றும் வனக்காப்பாளர் முருகன் ஆகியோருடன் ராமநாயக்கன்பாளையம் கிராமத்தில் உள்ள காரமணிதிட்டு என்ற இடத்தில் நாவலுார் காப்புக்காடு அருகில் உள்ள பட்டா நிலத்திற்கு சென்றோம் என்றும், அந்த நிலத்தின் பட்டாரதாரர் 1 ம் எதிரி கிருஷ்ணன் மற்றும் 2 ம் எதிரி கண்ணையன் ஆகிய இருவரையும் விசாரிக்க குச்சிக்காடு சுற்றி மின் வேலி அமைத்து குச்சி நிலங்களை எலிகளும், பெரிச்சாலிகளும் சேதம் செய்ததால் அதில் இருந்து பயிர்களை காப்பாற்ற வேண்டி மின் வேலி அமைத்ததாகவும், அதில் வந்து இரண்டு காட்டு எருமைகள் சிக்கி இறந்து கிடந்ததாகவும், அதை எங்களுடைய நிலத்திலேயே குழி தோண்டி புதைத்துவிட்டதாக சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் வனச்சரக அலுவலர் , கிராம நிர்வாக அதிகாரி மற்றும் கால் நடை மருத்துவரை வரவழைத்து எதிரிகளை விசாரிக்க எதிரிகள் சொல்ல சொல்லதான் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், தனது சாட்சியத்தில் பின்பு கால்நடைமருத்துவர் வந்து எருமைகளை பார்த்து அந்தஎருமைகள் வனகாட்டு எருமைகள் என்றும், 6 வயது மதிக்கத்தக்க ஆண் காட்டு எருமை ஒன்றும், பெண்காட்டு எருமை ஒன்றும் என்று சொன்னதாகவும், இரண்டு காட்டு எருமையின் உடல் அழுகிய நிலையில் இருந்ததகாவும், பின்பு இரண்டு காட்டு எருமைகளையும் கால்நடை மருத்துவர் உடல் கூர் ஆய்வு செய்தார் என்றும், பின்பு காட்டுஎருமையின் கொம்பை வெட்டி எடுத்துக்கொண்டு பின்பு, உடல்களை குழிதோண்டி புதைத்துவிட்டோம் என்றும், பின்பு அந்த இரண்டு காட்டு எருமையின் கொம்புகளையும், கம்பியையும் வனக்காப்பாளர் முருகன் எச்.நமூனா மூலம் கைப்பற்றி படிவம் 95 தயார் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

இந்த வழக்கு 1,2,3 மற்றும் 4 ஆம் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள வனவிலங்கை

எதிரி வேட்டையாடினார் என்பதாகும். இறந்து போன காட்டு எருமை முதலாம் பட்டியலில் உள்ள பாதுகாப்பான விலங்காகும். அந்த பாதுகாக்கப்பட்ட விலங்கை எதிரி பிரிவு 9 -ன் படி வேட்டையாடினாரா என்பதே அரசு தரப்பில் நிருபிக்கப்பட வேண்டிய பொருண்மை ஆகும்.

எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்கும் விதமாக அரசு தரப்பில் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தையே சார்ந்துள்ளன. எதிரி 1972 ம் வருட வன உயிரின பாதுகாப்பு சட்டம் பிரிவு 2(16) -ன் படி வனவிலங்கை கொன்றோ, விஷம் வைத்தோ, பிடித்தோ, வேட்டை நாய்களை வைத்து துரத்தியோ, பொறி வைத்து சிக்க வைத்தோ, வலையில் சிக்க வைத்தோ, விரட்டியோ, அல்லது பிடிப்பதற்காக உணவு பொருள் வைத்து அந்த வனவிலங்கை அதன் மூலம் வேட்டையாடியதாக தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை.

மேலும் அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகள் தனது குச்சிகாடு சுற்றி மின்வேலி அமைத்து குச்சி நிலங்களை எலிகளும், பெரிசாலிகளும் சேதம் செய்தததால் அதிலிருந்து பயிர்களை காப்பாற்ற வேண்டி மின்வேலி அமைத்ததாகவும், அதில் வந்து இரண்டு காட்டு எருமைகள் சிக்கி இறந்து கிடந்ததகாவும், எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்று தெரிவித்துள்ளார். மேற்கூரிய சாட்சியத்தில் எதிரிகள் தனது நிலத்தில் பயிர்களை காப்பாற்ற வேண்டி மின்வேலி அமைத்ததாகவும், அதில் வந்து இரண்டு காட்டு எருமைகள் சிக்கி இறந்து கிடந்தது என்ற இரு சங்கதிகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலாவது சங்கதியான எதிரிகள் தனது நிலத்தில் பயிர்களை காப்பாற்ற வேண்டி மின்வேலி அமைத்தது தொடர்பாக மின்வாரியம் எந்த ஒரு வழக்கோ முதல் தகவல் அறிக்கையோ எதிரிகள் மீது பதிந்து உள்ளதாக அரசு தரப்பில் எந்த ஒரு சாட்சியமோ ஆதாரமோ தாக்கல் செய்யாத நிலையில் எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டுமே சார்ந்து அச்சங்கதியை இந்நீதிமன்றத்தால் எற்றுக் கொள்ளமுடியாது. இரண்டாவதாக அதில் வந்து இரண்டு காட்டு எருமைகள் சிக்கி இறந்து விட்டதாக கூறுவது பிரிவு 2(16) -ன் கீழ் வேட்டையாடுதல் ஆகாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேலும், அ.சா.,1 குறுக்குவிசாரணையில் அதிரடிபடையனரின் தகவலின் அடிப்படையில் நாங்களும், அதிரடிபடையனருடன் சேர்ந்து சம்பவ இடம் சென்று விசாரித்ததில் அதிரடிபடையனர் அந்த விசாரடிணயில் பங்கு பெற்றதற்குண்டான ஆவணமோ, சான்றோ தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும், நான் தயாரித்த வடைபடத்தில் நான்கு எல்லையும்

இன்னாருடைய இடம் என்றும், இன்னார் தோட்டம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரி என்றும், சம்பவம் நடந்ததாக செர்லலப்படும் இடத்திற்கும் வனச்சரக இடத்திற்கும் இடையில் வேறு யாருடைய நிலம் இருக்கிறது என்ற தகவல் வரைபடத்தில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளீத்துள்ளார். மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் நிலத்தில் வேலியாக இருந்த கம்பியை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல என்றும், அவ்வாறு கைபற்றதாக சொல்லப்படும் சம்பவத்தின் வீடியோ ஆதாரங்களோ, புகைப்பட ஆதாரங்களோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் வனவிலங்குகள் இறந்து அதை அடக்கம் செய்யும் தகவலை ஒரு பதிவேட்டில் பராமரிக்கிறோம் என்றால் சரிதான் என்றும், அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் இதுதொடர்பாக அ.சா.2 ஜி, ரகுநாத் கால் நடை மருத்துவர் தனது சாட்சியத்தில் தான் சம்பவ இடத்திற்கு மதியம் 03.30 ல் இருந்து 03.45 மணிக்கு சென்றேன் என்றும், அங்கு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ஆத்தூர் வனச்சரக அலுவலர், வனவர் மற்றும் வனக்காப்பாளர் முருகன் மற்றும் சேலம் அதிரடிப்படையின்ர் இரண்டு நபர்கள் இருந்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இது தொடர்பாக அ.சா.5 நாகராஜ் கிராம நிர்வாக அலுவலர் தனது சாட்சியத்தில் தான் சம்பவ இடத்திற்கு மாலை 04.30 மணிக்கு சென்றததாகவும் அங்கு வனச்சரக அலுவலர் வனவர் மற்றும் வனக்காப்பாளர் முருகன் மற்றும் சேலம் வனச்சரக குழு, மேலும் கால்நடை மருத்துவர் இருந்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். கால்நடை மருத்துவர் மதியம் 03.30 மணி அளவில் சென்றபோது கிராமநிர்வாக அலுவலர் சம்பவ இடத்தில் இருந்தாக தெரிவித்துள்ள நிலையில் கிராம நிர்வாக அலுவலர் சம்பவ இடத்திற்கு மாலை 04.30 மணிக்கு செல்லும்போது கால்நடைமருத்துவர் சம்பவ இடத்தில் இருந்ததாக முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்கூரிய சாட்சியங்களை ஆராயும்போது எதிரிகளிடம் இருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலமும் , மகஜர்களும் சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்டதா என்ற சந்தேகத்தினை எழுப்புகிறது.

மேலும் அ.சா.3 சிராஜிதீன் வனச்சரக அலுவலர் தனது குறுக்கு விசாரணையில் எதிரிகளின் நிலத்தில் தான் எருமைகளை தோன்றி எடுத்தோம் என்பதற்கு ஆதாரமோ, புகைப்படமோ தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை என்றும், சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்ட எதிரிகளின் வீடு, நிலம், கிணர் பற்றிய விவரங்கள் ஏதும்

குறிப்பிடவில்லை என்றால் சரிதான் என்றும், வழக்கு சம்மந்தாக ஆய்வு செய்கையில் பொதுமக்கள் முன்னிலையில் பொது மக்களின் வாக்குமூலமோ, சாட்சியாகவோ சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும், நாங்கள் அந்த மின் கம்பியை கொண்டு வரும்போது மின்வேலியில் இருந்து பிரித்து கொண்டுவரவில்லை என்றால் சரிதான் என்றும், மேற்சொன்ன கம்பியை விவசாயிகள் கொடி கட்டுவதற்கோ, கொட்டாய் கட்டுவதற்கு பயன்படுத்துவார்கள் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்சொன்ன சாட்சியங்களிலிருந்து எதிரிகள் மின்வேலி அமைத்து காட்டு எருமைகளை வேட்டையாடி கொன்றார்கள் என்ற அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும்வகையில் எந்தவிதத்திலும் உதவுவதாக இல்லாமல் மேலும், வலுவிழக்கச் செய்கிறது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

ஆகவே, மேற்படி சாட்சியங்களின் சாட்சியங்களை ஆராயும்போது அரசு தரப்பு வழக்கை நிருபிக்கும் வகையில் எந்த ஒரு சாட்சியங்களும் அளிக்காததாலும், மேற்படி சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்குகிறது.

இறுதியாக, 1ம் எதிரி கிருஷ்ணன் மற்றும் 2ம் எதிரி கண்ணையன் மீதான குற்றச்சாட்டான 1972ம் ஆண்டு வன உயிரின பாதுகாப்பு சட்டம் பிரிவு 9-ன் படி( இணைத்து பார்க்க வேண்டிய பிரிவுகள் 2(16), 2(36) அட்டவணை-1 பிரிவு 1 Section 39(b) அரசு சொத்து, section 50 அதிகாரம், மேலும் பிரிவு 51 தண்டணை) -ன் கீழான குற்றச்சாட்டு எதுவும் இந்நீதிமன்றம் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பில் நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிப்பது என முடிவுசெய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து 1ம் எதிரி கிருஷ்ணன் மற்றும் 2ம் எதிரி கண்ணையன் மீது 1972ம் ஆண்டு வன உயிரின பாதுகாப்பு சட்டம் பிரிவு 9-ன் படி( இணைத்து பார்க்க வேண்டிய பிரிவுகள் 2(16), 2(36) அட்டவணை-1 பிரிவு 1 Section 39(b) அரசு சொத்து, section 50 அதிகாரம், மேலும் பிரிவு 51 தண்டணை) -ன் கீழ் குற்றவாளிகள் இல்லையென தீர்மானித்து எதிரிகளை கு.வி.மு.ச. 248(1) ன்கீழ் விடுதலை செய்து தீர்ப்புரைக்கப்படுகிறது.

இவ்வழக்கில் வழக்கு சொத்தாக சி.பி எண். 56/2017 ல் ஆண் காட்டு எருமையின்

கொம்பு - 1 வழக்கு சொத்தாக எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்குசொத்தை சா.பெ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பெண் காட்டு எருமையின் கொம்பு - 1 வழக்கு சொத்தாக எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்குசொத்தை சா.பெ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மின் வேலிக்காக பயன்படுத்தப்பட்ட கம்பி - 1 வழக்கு சொத்தாக எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்குசொத்தை சா.பெ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு சொத்தை ஆத்தூர் வன சரக அலுவலர் வசம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ஒப்படைக்கவும், சா.பொ. 1, 2 ஐ பாதுகாப்பாக வைத்து கொள்ளவும் சா.பொ. 3 ஐ மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்கவும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

மேற்படி தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினி மூலம் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு மீண்டும் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 28 ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண் 2,
ஆத்தூர்.

**<u>பின்இணைப்பு:</u>**

**1. அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:**

| | |
|---|---|
| அ.சா.1 | பொன்னுசாமி |
| அ.சா.2 | டாக்டர் திரு. ஜி. ரகுநாத் |
| அ.சா.3 | சிராஜிதீன் |
| அ.சா.4 | முருகன் |
| அ.சா.5 | நாகராஜ் |

**<u>அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | 1 ம் எதிரி கிருஷ்ணனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து |

| | |
|---|---|
| அ.சா.ஆ.2 | 2 ம் எதிரி கண்ணையன் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து |
| அ.சா.ஆ.3 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.4 | மகஜர் ஸ்டேட்மெண்ட் |
| அ.சா.ஆ.5 | படிவம் 95 |
| அ.சா.ஆ.6 | அறிக்கை GAUR- I |
| அ.சா.ஆ.7 | அறிக்கை GAUR-II |
| அ.சா.ஆ.8 | எச். நமூனா |
| அ.சா.ஆ.9 | சிட்டா அடங்கல் |
| அ.சா.ஆ.10 | புல வரைபடம் |
| அ.சா.ஆ.11 | A- Register சான்றிதழ் |
| அ.சா.ஆ.12 | என்னால் வழங்கப்பட்ட சான்று |

3. **<u>அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றுபொருட்கள்: -</u>**

| | |
|---|---|
| சா.பெ.1 | ஆண் காட்டு எருமையின் கொம்பு-1 ( வலது -64 செ.மீ, இடது-65 செ.மீ, கொம்பு இடைவெளி-30 செ.மீ) |
| சா.பெ.2 | பெண் காட்டு எருமையின் கொம்பு-1 ( வலது -55 செ.மீ, இடது-54 செ.மீ, கொம்பு இடைவெளி-25 செ.மீ) |
| சா.பெ.3 | மின் வேலிக்காக பயன்படுத்தப்பட்ட கம்பி விலைமதிப்பற்றது. |

**<u>4. எதிரி தரப்பில் சாட்சிகள், ஆவணங்கள் சான்றுபொருட்கள்:</u>** -இல்லை-

**<u>குறிப்பு:</u>**

1. எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
2. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையிலிருந்தார்.
3. வழக்கின் முடிவு பற்றிய விவரம் காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண் 2,
ஆத்தூர்.